# ஏப்ரல்- 13- வெள்ளி

**புனித மார்ட்டின்**

**ஆண்டவரே என் ஒளி: அவரே என் மீட்பு: யாருக்கு நான் அஞ்சவேண்டும்? திபா. 27:1**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள்5 : 34 – 42

அப்பொழுது கமாலியேல் என்னும் பெயருடைய பரிசேயர் ஒருவர் தலைமைச் சங்கத்தில் எழுந்து நின்றார். இவர் மக்கள் அனைவராலும் மதிக்கப்பட்ட திருச்சட்ட ஆசிரியர். திருத்தூதரைச் சிறிது நேரம் வெளியே போகும்படி ஆணையிட்டு, அவர் சங்கத்தாரை நோக்கிக் கூறியது "இஸ்ரயேல் மக்களே, இந்த மனிதர்களுக்கு நீங்கள் செய்ய எண்ணியுள்ளதைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.சிறிது காலத்திற்கு முன்பு தெயுதா என்பவன் தோன்றி, தான் பெரியவன் என்று கூறிக்கொண்டு, ஏறத்தாழ நானூறு பேரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். ஆனால், அவன் கொல்லப்பட்டான். அவனைப் பின்பற்றிய அனைவரும் சிதறிப் போகவே, அந்த இயக்கம் ஒன்றுமில்லாமல் போயிற்று.இவற்றுக்குப் பின்பு மக்கள்தொகை கணக்கிடப்பட்ட நாள்களில் கலிலேயனான யூதா என்பவன் தோன்றித் தன்னோடு சேர்ந்து கிளர்ச்சி செய்யும்படி மக்களைத் தூண்டினான். அவனும் அழிந்தான் அவனைப் பின்பற்றிய மக்கள் அனைவரும் சிதறிப்போயினர்.ஆகவே இப்போது நீங்கள் இம் மனிதர்களை விட்டுவிடுங்கள் என நான் உங்களுக்குக் கூறுகிறேன். இவர்கள் காரியத்தில் நீங்கள் தலையிட வேண்டாம். இவர்கள் திட்டமும் செயலும் மனிதரிடத்திலிருந்து வந்தவை என்றால் அவை ஒழிந்து போகும்.அவை கடவுளைச் சார்ந்தவை என்றால் நீங்கள் அவற்றை ஒழிக்க முடியாது நீங்கள் கடவுளோடு போரிடுபவர்களாகவும் ஆவீர்கள். "அவர் கூறியதைச் சங்கத்தார் ஏற்றுக்கொண்டனர்.பின்பு அவர்கள் திருத்தூதர்களை அழைத்து அவர்களை நையப்புடைத்து, இயேசுவைப்பற்றிப் பேசக் கூடாதென்று கட்டளையிட்டு விடுதலை செய்தனர்.இயேசுவின் பெயரை முன்னிட்டு அவமதிப்புக்கு உரியவர்களாகக் கருதப்பட்டதால் திருத்தூதர்கள் மகிழ்ச்சியோடு தலைமைச் சங்கத்தை விட்டு வெளியே சென்றார்கள்.அவர்கள் நாள்தோறும் கோவிலிலும் வீடுகளிலும் தொடர்ந்து கற்பித்து, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்துவந்தார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் இல்லத்தில் நான் குடியிருக்க வேண்டும்

## நற்செய்தி : யோவான்6 : 1 – 15

அக்காலத்தில் இயேசு கலிலேயக் கடலை கடந்து மறுகரைக்குச் சென்றார். அதற்குத் திபேரியக் கடல் என்றும் பெயர் உண்டு.உடல் நலம் அற்றோருக்கு அவர் செய்துவந்த அரும் அடையாளங்களைக் கண்டு மக்கள் பெருந்திரளாய் அவரைப் பின் தொடர்ந்தனர்.இயேசு மலைமேல் ஏறித் தம் சீடரோடு அமர்ந்தார்.யூதருடைய பாஸ்கா விழா அண்மையில் நிகழவிருந்தது.இயேசு நிமிர்ந்து பார்த்து மக்கள் பெருந்திரளாய் அவரிடம் வருவதைக் கண்டு, "இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?" என்று பிலிப்பிடம் கேட்டார்.தாம் செய்யப்போவதை அறிந்திருந்தும் அவரைச் சோதிப்பதற்காகவே இக்கேள்வியைக் கேட்டார்.பிலிப்பு மறுமொழியாக, "இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறு துண்டும் கிடைக்காதே" என்றார்.அவருடைய சீடருள் ஒருவரும் சீமோன் பேதுருவின் சகோதரருமான அந்திரேயா,"இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன. ஆனால் இத்தனை பேருக்கு இவை எப்படிப் போதும்?" என்றார்.இயேசு, "மக்களை அமரச் செய்யுங்கள்" என்றார். அப்பகுதி முழுவதும் புல்தரையாய் இருந்தது. அமர்ந்திருந்த ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம்.இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார். அவ்வாறே மீன்களையும் பகிர்ந்தளித்தார். அவர்களுக்கு வேண்டிய மட்டும் கிடைத்தது.அவர்கள் வயிறார உண்டபின், "ஒன்றும் வீணாகாதபடி, எஞ்சிய துண்டுகளைச் சேர்த்து வையுங்கள்" என்று தம் சீடரிடம் கூறினார்.மக்கள் உண்டபின் ஐந்து வாற்கோதுமை அப்பங்களிலிருந்து எஞ்சிய துண்டுகளைச் சேர்த்துச் சீடர்கள் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினார்கள்.இயேசு செய்த இந்த அரும் அடையாளத்தைக் கண்ட மக்கள், "உலகிற்கு வரவிருந்த இறைவாக்கினர் உண்மையில் இவரே" என்றார்கள்.அவர்கள் வந்து தம்மைப் பிடித்துக் கொண்டுபோய் அரசராக்கப்போகிறார்கள் என்பதை உணர்ந்து இயேசு மீண்டும் தனியாய் மலைக்குச் சென்றார்.

**தியானம்:** பகிர்ந்து வாழ்தல் என்பது ஒவ்வொரு மனிதனும் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியதொன்றாகும் என்பதை நாங்கள் ஆழமாக சிந்தித்து செயற்பட இன்றைய தியான வாசகங்கள் எங்களை அழைத்து நிற்கின்றன. இயேசு நோய்களைக் குணப்படுத்துகிறார், பேய்களை ஓட்டுகின்றார் இவ்வாறு பல அருள் அடையாளங்களைச் செய்கின்றார் என்று அறிந்த மக்கள், தாங்களும் விடுதலை பெறவேண்டும் என்று அவர் இருந்த இடத்திற்கு வந்தார்கள். அங்கு வந்தவர்களுக்கு உணவு பரியமாறவே அங்கு இருந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேருக்கு அளித்து பின்பு மிகுதியதானதை கூடைகளில் நிரப்பும்படி தம்து சீடர்களுக்கு கூறுகின்றார். (யோவா.6:9) இவற்றின் மூலமாக எமக்கு ஒரு படிப்பினை என்னவென்றால் இறைவனால் அனைவரும் அழைக்கப்பட்டள்ளோம் ஆனால் ஒரு சிலரே தெரிந்தெடுக்கப் பட்டுள்ளோம். தெரிந்தெடுக்கப் பட்டுள்ள நாங்கள் சிதறுண்ட மக்களை இயேசுவைப்பற்றி அறிவித்து ஒன்று பத்தாகவும், பத்து நூறாகவும் பெருகி அனைத்துலகும் மீட்படைய எங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்பதே. இதற்காக குடும்பம், அயலவர், பங்கு, சமூகம் , அனைவரும் ஒரே குடும்பம். நாங்கள் அனைவரும் சகோதர சகோதரிகள் என்று ஒருவரை ஒருவர் ஏற்று புரிந்து வாழவேண்டும். எனவேதான் பெரிய வியாழன் அன்று சீடர்களின் பாதங்களைக் கழுவி எவ்வாறு வாழவேண்டும் என்று செய்தும் காட்டினார். ஆனால் நாங்கள் அவர் காட்டியபடி வாழாமல் நான், எனது குடும்பம் என்று சுயநலம் கொண்டு வாழ்ந்து இறையன்பிலிருந்து விலகிவிடுகின்றோம். எனவே இதை உணர்ந்தவர்களாக சாதி, மத, பேதமின்றி யாவரும் ஒரே குடும்பம் என்பதை மனதில் நிலைநிறுத்தி ஒற்றுமையுடன் பகிர்ந்து வாழ்வோம்.